gistered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 43 — No. 3

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ர் 43 | சௌமிய பங்குனி 1970 மார்ச் | இதழ் 3

உள்ளுறை

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக்கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் 12 கிழமாடவீதியிலுள்ள சமாஜ அலுவலகத்தில் 29—3—70 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, மாதக் கூட்டம், ஆங்கில சைவ சித்நாந்த இதழ் முன்னேற்றம் முதலியனபற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் எல்லோரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகின்றனர். (செயலாளர்)

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் இரண்டாம் சமயக் கட்டளைப்படி நம் சமாஜச் சார்பில் திருமயிலைக் கபாலீச்சுரத்தில் 1—3—70 ஞாயிறு அன்று வித்துவான் அம்பை. இரா. சங்கரனர் "வைராக்கிய சதகம்" பற்றியும், 2—3—70 திங்கட்கிழமையன்று புலவர் ந.ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள் "பிரபு லிங்கலீலை" பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர் தங்கள் புத்தாண்டுச் சந்தாத் தொகை ரூ. ஐந்தினையும் விரைவில் அனுப்பிவைக்க வேண்டு கின்றோம். வி. பி. பி. யில் இதழை அனுப்பினல் சிலர் திருப்பியனுப்பி விடுகின்றனர். அதனல் சமாஜத்துக்குப் பேரிழப்பு ஏற்படுகின்றது. ஆகவே இவ்விதழைக் கண்ட துமாவது உடனே மணியார்டர் செய்துவிட வேண்டுகின் ரோம். சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப்பெயர் 2. சந்தா எண் 3. தெளிவான முகவரி 4. மாவட்டம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழ நாட்டில் உள்ள அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை அரசியலார் இசைவு பெற்றுத் தவறாது அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கின்றோம். மலேயா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு. சிவநேசன் அவர்களிடம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கி ரோம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :— செயலாளர்,

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழமாட வீதி, சென்னை-4.

Reg M 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் எம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 43	சௌமிய ஹூ பங்குனி மார்ச் 1970	இதழ் 3

சமயப் பகுதி

சிவதரு மோத்தரம்

ஆசிரியர்

சைவ சமய சாத்திரங்கள் எண்ணிலாதன கிடைக்கின்றன. பதினான்கு சாத்திரம் என்பது பழைமையான வழக்கு. மெய்கண்டார் முதல் உமாபதி சிவாசாரியர் வரையில் தோன்றிய சைவசந்தான ஆசாரியர் செய்த சாத்திர நூல்கள் இப் பெயர் பெறும். இப்பதினான்கோடு சிற்றம்பலநாடி செய்த துகளறு போதமும் மறைஞான சம்பந்தர் செய்ததாக நாம் கருதும் சதமணிக் கோவையும், மெய் கண்ட சாத்திரங்களாகவே கொள்ளத் தக்கன. இவையன்றி, திருவாவடுதுறை ஆதீன சாத்திரங்களின் தொகுப்பான பண்டார சாத்திரங்கள் பதினான்கு என்ற பெயரில் வெளிவந்துள்ளன. இத்தொகுப்பு பதினேந்து நூல்களைக் கொண்டது. இவையுமன்றி எண்ணிறந்த நூல்கள் சிறு நூல்களாக உள்ளன. சுமார் நூறு நூல்கள் உள. இவை பற்றிய ஒருசிறு ஆராய்ச்சித் தொகுப்பு 'சைவசித்தாந்தச் சிறு நூல்கள்' என்ற பெயரோடு திரு. தி. கி. நாராயண சாமி நாயுடு அவர்களின் மணி விழா மலராக 16-10-66 இல் எம்மால் வெளியிடப்பட்டது. பெருநூல்கள் பல உள்ளன.

சிவதருமோத்தரம், சிவநெறிப் பிரகாசம், தத்துவப் பிரகாசம் முதலாக இத்தகைய நூல்கள் சுமார் இருபது உள்ளன. இவை ஒன்றிரண்டு நீங்கலாக ஏனையவை எல்லாம் அச்சாகி உள்ளன. ஆயினும், புத்தகம் கிடைப்பது அருமை. அன்றியும் அச்சான நூல்களைப் பற்றிக் கூட அறிய விரும்பும் சைவ மக்களுக்கு விவரம் தெரிவது இன்னும் அருமையாய் இருக்கிறது. ஆதலால், இப் பெருநூல்களைப் பற்றி அறிய விரும்புவோர்க்கு விளக்கமாக, தொடர்ந்து குறிப்புக்கள் எழுதி வரலாம் என்ற நோக்கத்தோடு முதன் முதலாக இங்கு சிவதருமோத்தரம் என்பதைப் பற்றி எழுதுகிறோம்.

சைவத்தில் முத்தி மார்க்கங்கள் நான்கு என்று சொல்லப்படும். இவை சரியை, கிரியை. யோகம், ஞானம் என்பன. இவற்றுள் சிவ தருமோத்தரம், சைவசமயநெறி, வாயுசங்கிதை, மச்ச புராணம், பிரமோத்தர காண்டம், உபதேசகாண்டம் போன்றன சரியை பற்றிக் கூறுவன. தத்துவப் பிரகாசம் சிறப்பாகக் கிரியை பற்றிக் கூறுவது. சிவநெறிப் பிரகாசம், தத்துவ ரத்தினாகரம் முதலியன ஞானம் கூறுவன.

சிவதருமோத்தரம் என்ற நூல் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த மறைஞான சம்பந்தர் என்ற பெரியாரால் பாடப்பட்டது. இவர் கண்கட்டி மறைஞான சம்பந்தர் என்றும் சொல்லப் பெறுவார். இவர் உலக முகமாகச் செல்லும் புலன்களை அகமுகமாகத் திருப்பும் நோக்குடன் கண்ணைக் கட்டிக் கொண்டு வாழ்ந்தமையால் இப் பெயர் பெற்றார். இவர் முதன் முதலாகச் சைவசமய ஆசாரத்தை நெறிப் படுத்தி ஒருவகை செய்து ஒரு வரையறைக்கு உட்படுத்த முயன்ற பெரியார் ஆவார். சிதம்பரம் வீதியில் அக்னி மூலையில் ஒரு மடம் கட்டிக் கொண்டு வாழ்ந்தார் என்பர். அம்மடம் கண்கட்டி மடம் என்று பெயர் பெற்றிருந்தது. இவருடைய மாணாக்கர் சித்தியார் உரை செய்த மறைஞான தேசிகர். இவருடைய கருத்துக்கள் சிலவற்றைத் தருமபுர ஆதீனத்தை நிறுவிய குருஞானசம்பந்தர்

கண்டித்த காரணத்தால், இவருக்கு மாணாக்கர் பரம்பரை வளராமல் நின்று விட்டது. அக்காலச் சைவ நெறியின்படி இவர்கள் அனைவரும் துறவிகளாக இருந்தனர். பண்டாரம் என்று பெயர் பெற்றிருந்தனர். பண்டாரம் என்றால் துறவியான ஆசாரியர் என்று மட்டுமே பொருள். இவர்கள் அனைவரும் (குருஞான சம்பந்தர் உட்பட) காவி அணியவில்லை, வெள்ளுடையே அணிந்திருந்தனர். மறைஞான சம்பந்தர் சரியைத் துறையில் எழுதியநூல்கள் மிகப்பல. சிலவற்றை முற்கூறிய சிறுநூல்கள் என்ற புத்தகத்தில் விளங்கக் காணலாம். இவர் செய்த சைவ சமய நெறி என்ற பெருநூலும் சிறப்பானது.

இந்தச் சிவதருமோத்தரம் என்பது இவர் வடமொழியில் இருந்து மொழி பெயர்த்த நூல். இது (207) உபாகமங்களுள் ஒன்று எனப்படும். மூலாகமங்கள் 28, அவற்றுள் இருபத்துநான்காவது ஆகமமாகிய சந்தான சர்வோத்தமம் என்பது சிவபெருமானுடைய ஈசான முகத்தில் தோன்றியது என்பது வரலாறு. இவ்வாகமம் 11 உபாகமங்களை உடையது. அவற்றுள் இது எட்டாவது ஆகும். அகத்தியர் சிவதருமங்களைக் குறித்து முருகக்கடவுளை வினவ அவர் கூறிய உத்தரங்களை இவ்வாகமம் கூறுகின்ற படியால் இது சிவதருமோத்தரம் என்று பெயர் பெற்றது. சிவதருமங்கள் பலவற்றைக் குறிப்பிட்டு அவற்றால் விளையும் சிவ புண்ணியங்களை இது நன்கு கூறுகிறது. அன்றியும், பதிபசுபாசம் சரியாதி நான்கு பாதம், சாலோபாதி நான்கு பதம் ஆகியவற்றின் இலக்கணங்களைச் செவ்வனே தெரிவிக்கிறது.

இந்நூல் பாயிரப் பகுதியும், 12 இயல்களும் கொண்டது. மொத்தச் செய்யுள் தொகை 1224. இந்நூல் முதன் முதலாக உரையுடன் திருநெல்வேலி சாலிவாடீசுவர ஓதுவா மூர்த்திகளால் முத்தமிழாகர அச்சுக் கூடத்தில் 1867–இல் அச்சிடப்பட்டது. எட்டில் மூலமும் உரையுமாக நூல் உள்ளது. மற்றொரு பதிப்பு 1888-இல் திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை பார்வையில் சென்னை மீனாட்சி

அம்மை கலாநிதி அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டது. இக் காலத்தில் வரும் புத்தகங்களைப் பார்க்கும் போது, இவ்விரு அச்சுக்களையும் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும் என்றுதான் தோன்றும்: அவ்வளவு அழகுடையவை.

மறைஞான சம்பந்தர் வரலாற்றை இங்குக் கூற வேண்டியதில்லை. பல இடங்களில் பலர் கூறியிருக்கிறார் கள். நூல் செய்தார் மறைஞான சம்பந்தர் என்பது பின் வரும் பாடல்களால் விளக்கமாகும்:

முன்ன மாதி முருகன் முனிவர்க்குப்
பன்னி ராயிர மாகப் பகர்ந்தனன்
அன்ன உத்தரம ஆயிரத் தெட்டுநூறு
என்ன மாமுனிவன் சொல் இயம்பினன்,

அந்த வாக்கினை நோக்கி அருகரும்
சிந்த வாதுசெய் தேசிக ஞானசம்
பந்த நாமம் பரித்தோன் ஒருசதம்
சந்த நான்குநூ றைம்பதும் சாற்றினன்.

இனி முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது, இந்நூல் ஆசிரியர் சிறந்த தமிழ்ப்புலமை உடையவர் என்பது. நூல் சிறந்த தமிழ் நடையில் அமைந்தது. சந்தக் கவிகளும் சித்திரக்கவிகளும் மிறைக்கவிகளும் இதில்உள்ளன. பாயிரப் பகுதியில் இவர் வணக்கம் கூறும்போது காரைக்கால் அம்மை யார், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் ஆகியோ ருக்கு ஒரு பாடலில் வணக்கம் சொல்லுகிறார். இவ்வாறு கூறும் மரபு மிகவும் அருகி வழங்குவது. தேவார ஏடுகளை எடுத்து ஆராய்ந்தால், முதலில் அம்மையார் திருவாலங் காட்டுப் பதிகம் இரண்டையும் எழுதி, அதன் பிறகே சம்பந்தர், அப்பர், சுந்தரர் பதிகங்களை எழுதியிருக்கக் காணலாம். இது பழைய மரபு. இந்த மரபை இவ்வாசிரியர் நன்கு போற்றுகிறார். அன்றி, இவர் இங்குச் சிவபெருமா னுக்கு வணக்கப் பாடல் இரண்டும் சிவகாம சுந்தரிக்கு ஒரு பாடலும் பாடியிருக்கிறார். முருகனை அகத்தியர் கூற்றாக இயல்தோறும் பல இடங்களில் துதிக்கிறமையால் இங்கு தனியாகப் பாயிரத்தில் வணக்கம் சொல்லவில்லை போலும்.

முதல் இயல் பாமதருமாதி இயல் என்ற பெயருடையது. இங்கு சிரத்தையோடு செய்வதுதான் அறம், அன்பு இல்லாது செய்யும் ஈகை அறமாகாது என்று முதல் பாடலிலேயே கூறியிருப்பது மிக்க சிறப்பு. அடுத்து, பிரணவத்தின் பெருமை, ஆசிரியர் சிறப்பு, பஞ்சகவ்வியம், சிவபூசை முதலியன சொல்லப்படும். இந்த இயல் முடிவிலும் பின்னர் மிகப்பலவான இடங்களிலும் ஆசிரியர் பாடல்களைக் கடைமடக்காக விரப்பப் பாடியிருக்கிறார். கடைசியாகப் பாடிய பாடலில்

நினைத்த நன்பலமெளிய தின்முடியும்
நெருக்கியண்டர்கள் முனிவர்கள் பணியத்
தனத்த எந்தன தனதல தனவென்
சதிக்கி சைந்திட நடமிடு சதுரன்.

இங்கு இவர் கூறுகிற சந்தம் தக்கயாகப் பரணி காப்புச் செய்யுளில் வைரவர் வணக்கமாக ஒட்டக்கூத்தர் அமைத்துள்ள தனன தந்தன தனதன தனதன என்ற சந்தத்தை நினைவூட்டுகிறது.

இரண்டாவது சிவஞான தானவியல்; சிவஞானத்தைத் தாய்மொழியிலும் அல்லது வடமொழியிலும் உபதேசிக்கலாம். அபக்குவர்க்கு ஞானநூலைப் பொருளாசையால் சொல்லக்கூடாது. சிவஞான சாத்திரதானம் செய்வது சிறப்பு. சாத்திரம் எழுத வெற்றேடு கொடுத்தல் முதலியன பெரும் புண்ணியம். அன்றியும் மிகவும் சீரணமாய்ப் போன ஏட்டைப் புதுப்பித்து வைத்தல் பெரும் புண்ணியம். புதிய ஆகமம் திருமுறை ஆகியவற்றை எழுதி வைத்தால் பழைய நூலை நின்மலனாகிய சிவனுக்குப் பசுநெய்யில் தோய்த்து சிவாக்கினியில் ஓமம் செய்க என்று சொல்லப் பட்டுள்ளது.

புத்தகதானம், ஏடுதானம் எழுத்தாணித்தானம் முதலியன பெரும் புண்ணியமாகச் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கும் பொழுது இக்காலத்தில் பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்குப் புத்தகம் முதலியன அளித்து உதவி

செய்யும் கொடையை நம் முன்னோர் எவ்வளவு சிறப்பாய்ப் போற்றினர்கள் என்பது தெரிகிறது. மேலும், புதுப்பிக் கப்பட்ட பழைய பிரதிகளைப் பயனற்றுப்போன பின் அக்கி னியில் ஓமம் செய்க என்று இவர் கூறியிருப்பது, இந்த நூற்றுண்டில் ஏடுகளைப் புதுப்பிக்காமலேயே, ஓமம் செய்ய வசதியில்லாக் காரணத்தால், காவேரியில் விட்டுவிடுவதற்கு ஆதாரவாக இருந்திருக்கிறது என்று எண்ணத் தோன்று கிறது.

மூன்றுவது ஐவகையாக இயல்: ஐவகையாகமாவது தன்மயாகம், யாகம், ஜபயாகம், தியானயாகம், ஞானயாகம் என்பன இவற்றை இவ்வியல் விளக்கமாகக் கூறுகிறது. நான் காவது பல விசித்திராகாரண இயல்: இது முந்திய இயலில் கூறிய கன்மயாகப் பலன்கள் அதிகமாவதற்குக் காரணமான தேசகால வர்த்தமானங்களை உணர்த்துகிறது. இங்கு ஏழு பாடல்களில் சுமார் 50 தலங்களின் பெயரைக் குறிப்பிடு கிறார். இவற்றுள் வெற்றியூர், காரிகரை, விரிஞ்சை, மூவலூர் ஆகிய வைப்புத்தலங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஐந்தாவது சிவதரும இயல். பொருள்-வெளிப்படை. நூலெங்குமே சிவபூசையின் சிறப்புச் சொல்லப்படுகிறது. இயல் இறுதியில் திருவிழி மிழலையைக் கூறுகிறார். ஆறுவது பாவ இயல். இங்கு சிவநூல் படிக்கும்போது இருக்க வேண்டிய ஆசாரம் நன்கு சொல்லப் பட்டுள்ளது. மேலும் உலக நீதிகளும் பல சிவ தரும அடிப்படையில் சொல்லப் பட்டுள்ளன. மரங்களை வெட்டலாகாது என்று கூறி யிருப்பது மிகவும் சிறப்பு. திருக்குறட் கருத்துக்களும் இங்குக் காணப்படுகின்றன. இக்காலக் கண்ணோடு பார்க் கின் ஒருவர் அந்தரங்கமாகச் சேமித்து வைத்திருக்கும் பொருளை அரசனுக்குக் காட்டித் தரலாகாது என்பது வியப் பைத் தருவது இந்த இயலில் கூறப்பட்டுள்ள நீதிகளும் ஆசாரங்களும் வாழ்க்கையில் என்றைக்குமே நன்னெறி காட்டவல்லது. ஏழாவது சுவர்க்க நரக வியல்பு; இதன் பொருள் வெளிப்படை. இங்கு தீவினையுடையவர்கள் யமலோகம் சேருவர் என்று சொல்லுமிடத்தில் சந்தப்

பாடலாக அனேகம் சுவைபடப் பாடியிருக்கிறார். நாகங்களின் பெயர் முதலியன, இந்த சமயத்தில் சொல்லப்படும் அண்ட கோசங்களின் அமைப்பை ஒட்டிக் கூறப்படுகின்றன.

எட்டாவது சனன மரண இயல். இதில் பிறவியின் தோற்றமும் வகைகளும் சொல்லப்படுகின்றன. உடலின் நிலைமை முதலியன இங்கு விளக்கப்படுகின்றன. ஒன்பதாவது சுவர்க்க நரகசேட இயல். இங்கு செய்யப்பெறு நல்வினை, தீவினை இரண்டுக்கும் பலனாகிய புண்ணிய பாவங்களை விரித்துக் கூறுகின்றார். பத்தாவது சிவஞான யோக இயல். இது ஞானாசிரியனை அடைந்து சிவஞானம் பெற்று சிவஞானயோகம் அடைவதைக் கூறுகின்றது.

பதினொன்றாவது பரிகார இயல் என்பது ஆன்மாக்கள் இருவினைப் பலன்களை அனுபவிக்கும் இடத்தில் பாவம் போவதற்கான பரிகாரம் கூறுகிறது. பன்னிரண்டாவது கோபுர இயல்; இது உலக அமைப்பையும், அங்குள்ள உயிர்களையும் விளக்குவது; இறுதியில் நூற்பயன் கூறுகின்றார். புத்தகத்தையே படிக்குமுன் ரசித்து அர்ச்சனை செய்யவேண்டும் என்பது இவருடைய கருத்து.

இவ்வாசிரியர் ஒவ்வோர் இயலிலும் இறுதியில் சிவபெருமான்துதி, முருகன்துதி, அகத்தியர்துதி ஆகப் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். சிவபெருமான் துதி, எல்லா இடங்களிலும் மடக்காக அமைந்துள்ளது. பன்னிரண்டாம் இயலில் ஒரு பாட்டை மாலை மாற்றாக அமைத்திருக்கிறார். நூல் எங்குமே சந்தக்கவிகள் மலிந்து காணப்படும்.

இந்த நூல் இப்போது அச்சில் இல்லை. அச்சிட்டு சைவர் அனைவருக்குமே கிடைக்கும்படிச் செய்வது மிக்க அவசியம். இது சிவபுண்ணியங்களைக் கூறியிருந்தபோதும் கூட வாழ்க்கையில் ஒழுக வேண்டிய ஆசாரங்களையும் கடைப்பிடிக்க வேண்டிய பொது நெறிகளையும நன்கு பாகுபடுத்திக் கூறுகின்றது. அனைவரும் பயில வேண்டியு சிறந்த

னால், நரகத் துன்பம் போன்ற கருத்துக்கள் இக்காலக் கொள்கைக்குப் பொருந்தாவெனினும், பொதுக்கருத்துக்கள் எக்காலத்தும் எல்லா மக்களுக்கும் பொருந்தும்.

சிவதருமோத்தர நூல் சென்ற நூற்றாண்டு வரையில் சோழ நாட்டில் எல்லா மக்களாலும் விரும்பிப் பயிலப்பட்டு வந்தது. வைதிகச் சைவர் வீடுகளிலெல்லாம் இந்நூல் ஏடு இருந்தது. எனினும் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இந்நூலைப் படிக்க விரும்பியபோது எங்கும் கிடைக்கவில்லையென்றும், சாதுரியம் மிக்க ஒரு மாணாக்கர் திரிசிராப்பள்ளியிலிருந்து ஓர் ஏட்டைப் பெற்று வந்தா ரென்றும் சுவையுடைய கதையொன்றை ஐயரவர்கள் எழுதி யிருக்கிறார்கள்.

உ

சிவமயம்

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற

சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜ 64-ஆம் ஆண்டு விழாவின்

சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை

வித்துவான். திருமதி. ப நீலா அவர்கள்

திருச்சிற்றம்பலம்

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே"

திருச்சிற்றம்பலம்

வணக்கத்திற்குரிய அன்னையீர்! அறிஞர் பெருமக்களே! அனைவருக்கும் என் அகங்கனிந்த கைகூப்பு.

கற்றறிந்தோர் ஏத்தும் காஞ்சியில் சைவசித்தாந்த மாநாட்டில் பங்குபெறும் பேறு எனக்குமுண்டு என்பதனை

முதலில் நானே நம்ப மறுத்தேன். தலைமைப்பொறுப்பை என்னிடம் தந்துள்ளார்கள் என்றால், என் தகுதி நோக்கித் தந்தது அன்று அது. பின், ஆன்மா சார்ந்த தன் வண்ணம் என்பார்களே அதுபோலத் திருவாளர், அருணைவடிவேலு முதலியார் அவர்கள் சித்தாந்தக் கலைமணியாக எங்கள் கல்லூரியில் இருப்பதனால் அடியேனையும் நம்பி இந்தப் பொறுப்புத் தந்தார்கள் போலும்! ஆனால், சைவசித்தாந்த மாக்கடலருகே சிப்பி பொறுக்கும் சிறுமி நான்.

ஆண்டுதோறும் நடைபெறும் சமாஜ விழாவில் சைவ மங்கையர் மாநாடு நடைபெற்றாலும் இக்கச்சியம் பதியில் நடைபெறும் மங்கையர் மாநாட்டிற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. ஏனெனில். சத்திபீடங்களுள் இது முதலாவது. அம்பிகை இறைவனை என்றும் ஏத்தி வழிபடும் பெருமையோடு, இறைவன் அளித்த இருநாழிநெல்லைக்கொண்டே அவள் காமக்கோட்டத்தில் அமர்ந்து முப்பத்திரண்டறங்களையும் வளர்க்கும் பெருமையை உடையது.

"எண்ண ரும்பெரு வரங்கள்முன் பெற்றங்
கெம்பி ராட்டிதம் பிரான்மகிழ்ந் தருள
மண்ணின் மேல்வழி பாடுசெய் தருளி
மனைய றம்பெருக் குங்கரு ணையினால்
நண்ணு மன்னுயிர் யாவையும் பல்க
நாடு காதலின் நீடிய வாழ்க்கைப்
புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப்
பொலிய முப்பதோ டிரண்டறம் வளர்க்கும்"

என்பது சேக்கிழார் திருவாக்கு.

"தொல்லை மறைதேர் துணைவன்பால் யாண்டுவரை
எல்லை இருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலாள்
ஓங்குலகில் வாழும் உயிரனைத்தும் ஊட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை"

என்று அணிநூலும் இதனைச் சிறந்தெடுத்துப் பாராட்டுகின்றது. எனவே இம்மங்கையர் மாநாட்டிற்குத் தலைமை ஏற்பதில் நான் மிக்க பெருமையுறுகின்றேன்.

கல்வியிற் கரையிலாத காஞ்சிவாழ் பெருமக்கள் பரந்த உள்ளமும், சிறந்த பக்தியும் உடையவர்கள்.

"எல்லீர் காஞ்சியுள்ளார் யாவரும் முனிவர்" என்கின்றது காஞ்சிப் புராணம். இப்பெருமக்களது பேராதரவும், சமாஜத்தினரது பேரன்புங்கொண்டு எனது பணியை ஒருவாறு ஆற்றத் துணிந்து, முதற்கண் சிலவற்றைச் சொல்ல விரும்புகின்றேன்.

இங்கே மகளிர் மாநாட்டில் பங்கேற்கும் வாயிலுக்கு வழிகாட்டிய திருவாளர், க. வச்சிரவேலு முதலியார் போன்றவர்களை நன்றியுடன் நினைக்கிறேன். நான் சாத்திர தோத்திரங்களில் துறைபோகிய அறிஞர் நடுவுள் இருக்கும் இப்பேற்றை அன்புடன் அளித்ததற்காக. இனி உங்கள் முன் நான் சொல்ல இருக்கும் செய்திகள் முற்றும் புதியன அல்ல. பெண்கள் சிறப்பாகத் தம் வாழ்வில் கடைப்பிடித்த கொள்கைகளை மீண்டும் நினைவு படுத்துவனவே.

இல்லக விளக்கு:

பெண்ணிற்கு ஏற்றம் தருவது பதிபக்தியே. இல்லம் என்ற கோயிலைத் தூய்மையாக்கிக் கணவன் என்ற தெய்வத்தைக் குடியேற்றி வழிபட்டு உய்யும் வழிபாடு தான் அவளுடைய வாழ்வு. மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேணும் என்றார் கவிமணி.

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

—என்பது குறளமுதம்.

நாடாகவோ, காடாகவோ, அவலாகவோ, மிசையாகவோ பூமி இருக்கட்டும். எங்கே ஆடவர் நல்லவரோ அங்கே நிலமும் நன்மையுடையதாக இருக்கும். (புறம்-18) அந்த ஆடவர் நலம்பெற்றொளிர பெண்ணென்ற இல்லக விளக்கே காரணமாகிறது. 'மனைக்கு விளக்கம் மடவார்' என்பது ஒரு பழம் பாடலின் தொடக்கம்.

தற்காத்தல், தற்கொண்டாற் பேணல் என்பவற்றோடு இருவர்க்குமுள்ளதாய சொற் காத்தலால் பெண் இயல்பாகவே இல்லக விளக்காக அமைந்துவிடுகிறாள்.

அதனால், தானும் தன் கொழுநனும் விளக்கம் பெறுதலே யன்றி, அவள் பிறந்த குடியும் புகுந்த குடியும் விளக்கம் பெறுகின்றன. கொண்டானிற் றுன்னிய கேளிர் பிறரில்லை என்று எண்ணுவதோடு, கொண்ட கொழுநன் குடிவறனுற்றெனக் கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாதவளே தமிழ்ப் பெண்ணாகிறாள். அவள் தன் கணவனிடத்துக் கொள்ளும் அன்பிற்கு எல்லையே இல்லை எனலாம்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே.

(குறுந்தொகை-3)

என்ற பாடல் மேற்சொன்ன கருத்தை நன்கு விளக்கும்.

மடமையை அணியாக் கொண்ட மங்கைதான் கூறுகிறாள் 'இம்மை மாறி மறுமையாயினும் நீயாகியர் எம் கணவனை, யானாகியர் நின் நெஞ்சு நேர்பவள்'—என்று.

மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்ட லாவதோர் தீவினை தீர்வரம்
வேண்டினாள் தொழுது என்று விளம்புவாய்

என்று அனுமனிடம் ஸ்ரீராமனுக்குச் செய்தியனுப்புகிறாள் சனகர் பெற்றசோதி. இப்பண்புதான் அவளை மேன்மையுறச் செய்கிறது.

தாய்மை :

பெண்ணைத் தெய்வமாக்குவது தாய்மையென்ற திருவருள்தான். படைத்தலும் காத்தலும் திருவருளின் முதற்செயல்கள். அவை பெண்ணின் தாய்மை வழியே நிகழ்கின்றன. புறநானூற்றில்—

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்று பொன்முடியார் எல்லோருக்கும் ஒவ்வொன்றைக் கடனாகக் குறிப்பிட்டுவிட்டுத் தாய்க்கு மட்டும் ஈனுதலும்

புறந்தருதலுமாகிய இரண்டினைக் கடமைகளாக்கினர்—அவைகளை அவளே செய்யக் கூடியவள் என்பதனால். இவ்வுயர் கருத்தை மணியெனக் கொண்டு மாண்புறுத்துவார் வாதவூரடிகள் 'பால் நினைந்தூட்டும் தாய்'—என்று திருவாசகத்துள்.

அறம் வளர்த்த நாயகியாம் அன்னை, பரம்பொருளின் துணைவிமட்டுமல்லள்; அவருக்கே அன்னையுமாகி விளங்குகிறாள் என்கிறார் திருக்கடவூரில் வாழ்ந்த அபிராமியின் பக்தர்.

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையு மாயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை யிறைவியுமாம்
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு
[செய்தே

"சிவம்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னி யாகுந்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியுமன்றே"

என்ற சிவஞான சித்திச் செய்யுள் அம்பிகை இறைவனுக்கு அன்னையாய் நிற்கும் தத்துவத்தை விளக்குகின்றது.

கற்பு :

இனி அடுத்ததாகப் பேசப்படும் பெண்ணின் பண்பு கற்பு என்பதே.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்—என்பது குறள்,

தெய்வக் கற்பைத் திருமணத்திற்கு முன்னேயும் 'அயலறியா மனம்' என்று சேக்கிழார் குறிப்பிடுவார்.

'அயலறியா மனம் விரும்பப் பண்டைவிதி கடைக்கூட்டப் பரவையாருங் கண்டார்' என்பது அவர் வாக்கு. தமிழ்நாட்டுப் பெண்கள் கற்பிற்கே உறைவிடமானவரல்லரோ! பெண்ணிற்கு மட்டுமே இவ்வரிய கற்பு

சொந்தமென்று பேசக்கூடாது. பெண் விரைந்து பின் செலினும் தன் செலவில் குன்றாத ஆண்மைப் பண்பே ஆணிடம் கற்பென்று கூறப்படும்.

பொய்கையுந் தீயும் ஒன்றெனறவள் :

பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உருவு நிறுத்த காமவாயில், நிறை, அருள், உணர்வு, திரு என ஒப்பின் வகை பேசப்படும். இவற்றுட் பட்ட பெண்ணரசியாகப் பூதப் பாண்டியனை மணந்து ஈடும் எடுப்புமின்றி வாழ்ந்து கணவனின் மறைவைப் பொறுக்காமல்,

"செல்க எனச் சொல்லாது ஒழிக என விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே—

எம்முடைய பெரிய தோளுடைய கணவன் இறந்தான்; அவனுடன் தீயின்கண் வேவது – குளிர்ந்த தாமரை பூத்த தடாகத்துள் பாய்வதுபோல எனக்குத் தோன்றும். அது உமக்கு அரிதாகலாம்" என்றுகூறித் தீப்பாய்ந்து உயிர் துறந்த அறிவுச் செல்வியாம் பெருங்கோப் பெண்டின் கற்பும்,

'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்லென்று
இணையடி தொழுது வீழ்ந்த'

அறத்தின் செல்வியாம் கோப்பெருந் தேவியின் கற்பும் தமிழரின் ஏடுகாட்டும் சாவா மூவாச் செய்திகள்.

மட்டார் குழலார் பிறந்த பதி :

சிலம்பின் செல்வியாம் கண்ணகி, பத்தினிப்பெண்டிர் பலர் பிறந்த பதியெனத் தனது புகார் நகரை வருணிப்பாள்.

வன்னி மரமும் மடைப்பள்ளியுஞ் சான்றாக
முன் னிறுத்திக் காட்டிய மொய்குழலாள், பொன்னிக்
கரையின் மணற்பாவை நின்கணவ னாமென்று
உரைசெய்த மாதரொடும் போகாள் திரைவந்து
அழியாது சூழ்போக ஆங்குந்தி நின்ற
வரியா ரகலல்குல் மாதர், உரைசான்ற
மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்

தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கல்தவில் தோளாயோ வென்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக் கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள், மன்னி
மணல்மலி பூங்கானல் வருகலன்கள் நோக்கிக்
கணவன்வரக் கல்லுருவம் நீத்தாள், இணையாய
மாற்றாள் குழவிவிழத் தன்குழவியுங் கிணற்று
வீழ்த்தேற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணாள், வேற்
[றொருவன்
நீள்நோக்கங் கண்டு நிறைமதி வாள்முகத்தைத்
தானோர் குரக்குமுக மாகென்று போன
கொழுநன் வரவே குரக்குமுக நீத்த
பழுமணி அல்குற்பூம் பாவை

இவர்கள் போலப் பின்னும்பல கற்பரசிகள் பிறந்தமண் என்று தென்தமிழ்ப் பாவையாம் கண்ணகி சிறப்பிப்பதில் தமிழ்மண், கற்பரசியரைக் கணக்கின்றிப் பெற்று நிற்கும் மண் என்பது விளங்குகின்றதன்றோ!

இவ்வரிசையில் சைவ மங்கையர் பலர் இன்னும் சிறப்பாக நினைவிற்கு வருகின்றனர். கற்பெனப்படுவது சொல் திறம்பாமை எனப்பொருள்படும்போது, கணவனது சொல்லையே எல்லையாக் கொண்டு வாழ்ந்து அவருக்கு அரும்புகழ் தேடித்தந்த சைவ மங்கை இயற்பகை நாயனாரின் மனைவியாரை ஈண்டுக் குறிப்பிடல் வேண்டும்.

இன்று நீரெனக் கருள்செய்த திதுவேல்
என்னுயிர்க் கொருநாத நீரு ரைத்த
தொன்றை நான்செயும் அத்தனை யல்லால்
உரிமை வேறுளதோ எனக்கென்று
தன் தனிப்பெருங் கணவரை வணங்கத்
தாழ்ந்து தொண்டனார் தாமெதிர் வணங்கச்
சென்று மாதவன் சேவடி பணிந்து
திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள்.

என்று புகழுமாறு கற்புக்கோர் காட்டாக விளங்குகிறார் அவர்.

'எந்தையும் எம்அனையும் அவர்க்கு எனைக்கொடுக்க இசைந்தார்கள்; அந்த முறையால் அவர்க்கே உரியவள்

நான் ஆதலினால் இந்த உயிரை அவர் உயிரோடு இசைவிப்பேன் எனத் துணிந்த திலகவதியாரின் தெய்வக் கற்பும் பேசுந்தரத்ததோ!

சைவத்தின் தொன்மை:

பழம் பெருமை வாய்ந்தது சைவசமயம்.

'எல்லா வுயிர்க்கு மேம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோன்'—

"நீலமணிமிடற் றொருவன் போல மன்னுக பெரும"—
என்ற புறநானூற்றுத் தொடர்கள்,

கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன்; மாலையன்: மலைந்த கண்ணியன்;
மார்பி னஃதே மையில் நுண் ஞாண்;
நுதல திமையா நாட்டம்; இகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே; மூவாய்
வேலும் உண்டத் தோலா தோற்கே;
ஊர்ந்த தேறே; சேர்ந்தோள் உமையே;
செவ்வா னன்ன மேனி, அவ்வான்
இலங்கு பிறை யன்ன விலங்குவால் வையெயிற்று.
எரியகைந் தன்ன அவிர்ந்து விளங்கு புரிசடை,
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி,
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே.

(அகம்—கடவுள் வாழ்த்து)

என்ற அகநானூற்று வருணனை, இவையாவும் சிவ பெருமானின் தொன்மைச் சிறப்பையும்,

'மணிமயி லுயரிய மாறு வென்றிப்
பிணிமுக வூர்தி யொண் செய்யோன்' (புறம் 56)

'சூர் நவை முருகன் சுற்றத் தன்ன' (புறம் 23)

'சேவலங் கொடி யோன் காப்ப' (குறுந் 1)

என்ற வரிகள் செவ்வேளின் சிறப்பையும் காட்டும்.

இன்னும் எத்தனையோ சான்றுகள் உண்டு சைவ மதத்தின் தொன்மைக்குக் கட்டியம் கூற இப்படி வளர்ந்த சமயம் சமணத்தால் மூடப்பட்டபோது எழுந்த மறுமலர்ச்சியே தேவார ஆசிரியர்கள் செய்த தொண்டு பின்னால் வந்த பெரியவர்களும் சைவசமயத் தளிர்ப்புக்காகத் தளராது உழைத்தனர்.

சித்தாந்தத் தேன் :

ஏறக்குறைய 250 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய குமரகுருபரர் வேதம் என்ற மரத்தில் வேதாந்தம் என்னும் பழச்சாரமாம் சித்தாந்தத் தேன் அமுதம் கிடைக்கும் அழகை அனுபவித்துக் காட்டுகிறார்.

குடிலை என்னும் தடவயல் நாப்பண்
அருள் வித்திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேத மென்னும் பாதவம் வளர்த்தனை
பாதவ மதனிற் படுபயன் பலவே அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே இலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும் வேதாந்த மென்றுச்சியில் பழுத்த
ஆரா வின்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவ சித்தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே —

என்பது அவர் அருளிய பண்டார மும்மணிக் கோவை. சித்தாந்தத் தேனை நுகர்வோர் சிலரே – என்ற கூற்று உண்மையாயிற்று. சமண சிந்தாமணியில் மூழ்கிய அநபாயனைச் செந்நாவலர் சேக்கிழார் சைவசமயத்துற்குத் திருப்பியிராவிட்டால் அச்சிலரும் இன்று இலரே யாவர்.

பெண்ணிலக்கணம் :

குன்றை நகர் மேய கொண்டல் பொழிந்த பெரிய புராணத்துள் அமரகவி பாரதியின் வாக்கைக் கைவிளக்காகக் கொண்டு பெண்ணிலக்கணம் தேடுவோம்.

'நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்,
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்'—

எங்கிருந்தோ வந்த கண்ணன் எனக்கு அடிமையாகி என்னையும் அடிமை கொண்டான் என்பார் எட்டயபுரத்து இளஞ்சிங்கம்.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே

என்று குறுந்தொகை பேசுவதுபோல, எங்கிருந்தோ வந்த பெண், கொண்ட கொழுநனைக் கடவுளாக் கண்டு வழிபட்டு மேற்கூறிய வாறே யொழுகி இல்லறத்தைச் சிறக்கச் செய்கின்றாள். பெரியபுராண அடியவர் சிலரின் வாழ்வு இத்தகைய மாதரசிகளால் மேன்மையுற்றதுண்டு.

நண்பனாகித் தவறு திருத்திய தையல் :

திருநீலகண்டர் ஒரு நாள் எதிர்பாராத வகையில் பரத்தை யொருத்தியின் இல்லத்தில் சென்று மீள, அது கண்ட அவர்தம் துணைவியார் கலங்கினார். முகம்நக நட்பது அல்ல நட்பு. சென்ற விடத்தாற் செலவிடாது தீதொரீஇ நன்றின்பால் செலுத்துவதும் தன் கடனே எனக் கருதி 'தீண்டுவீராகில் எம்மைத் திருநீலகண்டம்' எனச் சிவன்மேல் ஆணையிட்டு அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாவகைப் பல்லாண்டு வாழ்ந்து பண்பைக் காத்தார்; பதியையும் காத்தார்.

உற்றவிடத்து உதவிய உத்தமி :

மாரிக்காலத்தில் ஓர் இரவில் சிவனடியார் ஒருவர் பசித்துவர வறுமையில் வாடுகின்ற இளையான்குடி மாறனார் கலங்கினார். செய்வதறியாது திகைத்த அவர் திகைப்பு நீங்க, செல்லல் நீங்கப் பகல் வித்திய செந்நெல் மல்லல் நீர்முளை வாரிக்கொடு வந்தால் வல்லவாறு அமுதாக்கலாம்-என்று கைகொடுத்து உதவினாள் துணைவி. மற்றம்மாற்றம் மனைவியார் கூற முன்பெற்ற செல்வமே மீண்டுங் கிடைத்

தாற்போல் மனம் மகிழ்ந்தார் மாறனர். உடுக்கை இழந்தவன் கைபோல உதவி, வரும் இடர்களைய உதவு வதில் மந்திரியாக விளங்கினுள் அப்பெண்.

ஆசிரியரென அமைந்த ஆயிழை:

பாடங் கூறுவோன் மட்டும் ஆசிரியன் அல்லன். ஆசு எங்குக் கண்டாலும் மலர் முகத்தோடு அதனை இரியச் செய்யும் இயல்பினர் அனைவருமே ஆசிரியர் தாம். பவணந்தியார் நன்னூலில் 'நிலம் மலை நிறைகோல் மலர் நிகர் மாட்சி' பெற்றிருக்கவேண்டும் ஆசிரியர் என்று இலக்கணங் கூறுவார்.

அகழ்வாரைத் தாங்கும் நிலத்தளவு பொறை, அளக் கலாகா அளவொடு பொருளுங் கொண்டு நிலையில் திரியாத தோற்றத்தால் மலையொத்த மாண்பு, ஒருபாற் கோடாத சான்ருண்மையால் துலைக்கோலென்ற ஒட்பம். யாவரும் நயக்கும் இயல்பொடு — இனிமை, மணம் மலர்ச்சி பெற்ற மலரின் எழுச்சி என்ற இவ்வாசிரியத் தன்மைகளை யெல்லாம் பெற்றுச் சிறந்த வனிதை யொருத்தியே சைவ சமயம் வாழக் காரணமாய் இருந்தாள் என்பதை நினைக்கும் பொழுது நம் உள்ளம் களிக்கின்றது

மைவைத்த கண்டன் நெறியன்றி மற்ருேர் நெறி கருதாத் தெய்வக் குடிச் சோழர் திருமரபில் தோன்றித் தென்னவனின் குலம் விளக்கச் சென்ற மங்கையர்க்கரசியே அம்மம்மை. நன்றறியா அமண்சமயம் நாதன் குறுகினு னென்று பரசமய கோளரியாம் பாலருவாயரைப் பணிந்து இத்தொடக்கிலிருந்து தலைவனைக் காக்க வேண்டினுள் அரசி. அமண் என்ற வல்லிருள்போய் மாய்வதற்குவந்த ஞானமணி விளக்காம் ஞானசம்பந்தரை ஆலவாய்க் கோயிலில் கண்டு,

"பானல் வங்கண்கள் நீர்மல்கப் பவளவாய் குழறி
யானும் என்பதியுஞ் செய்த தவமென் கொல்",

என்று பணிந்தார் மங்கையர்க்கரசியார். தமக்காக மட்டு மல்ல - தம் கணவனின் தவற்றிற்காகவும் வருந்தி—அதற்கு மருந்தும் தேடுகிருர். தாம் அழைக்க மதுரை வந்த ஞானக்

கன்றிற்குப் பாயுடுக்கும் பாவியர் நன்னமடலாது செய்யும் ஊனம் வந்தடையில் உயிர் துறப்போம் - என்று உறுதி பூண்டார்.

இவ்வாறு நிலமென்ற பொறுமை, மலையென்ற மாண்பு, துலையன்ன நடுவு நிலைமை, பலரென்றமாட்சி பெற்று அரசனைத் தீய தொடக்கிலிருந்து மீட்டுச் சைவப் பயிர் தழைக்கச்செய்த மங்கையர்க்கரசியின் செயலை ஆசிரியப் பண்போடு பொருத்திப் பார்க்க மகிழ்வே மலர்கிறது.

அன்பிலே தெய்வமான அம்மை :

துணைவன் தான்தந்த மாங்கனி கேட்க, உற்றவிடத் துதவும் விடையவர்தாள் மனங்கொண்டு உணர்தலுமே அவரருளால் அதிமதுரக்கனி ஒன்று கைவரப் பெற்றார் புனிதவதியார். இஃது ஈசனருள் எனக்கேட்ட இல்லிறை வன் அது தெளியானாய்ப் பின்னும் ஆசில்கனிகேட்க, அம்மை இறைவனை ஈங்கிதளித்தருளீரேல் என்னுரை பொய்யாகும் - என இறைஞ்சப் பின்னும் கனி கையில் வந்தது. மானுடம் இவர்தாம் அல்லர் என்றுணர்ந்த பரமதத்தன் - நற்பெருந் தெய்வமாதல் நானறிந்தேன் — என்று பலருங் கேட்கப் பகர்ந்தான். பிறந்து மொழி பயின்ற பின்பெல்லாம் அண்டர்பிரான் திருவார்த்தையே பேசும் பண்பிலே தெய்வமாகி அனைவர்க்கும் அப்பனால், அம்மையே என அழைக்கப்பெற்றவள் காரைக்காலம்மை.

பார்வையிலே சேவகனான சேயிழை :

சிவனடியார்களுக்கு முன் தம்மை, 'சிறுதொண்டர்' —எனக்கருதிய சிறுத்தொண்டரின் இல்லத்துணைவியார் இதன் இலக்கியமாகிறார். சொல்கேட்டுப் பணிந்து நடக்கும் பண்பு சேவகருடையது. அதுவன்றி மறுப்போ— விருப்பு வெறுப்போ கஃட்டும் கடனே அவர்க்கில்லை.

சிறுத்தொண்டரது இல்லம் வந்த அடியார் பிராயம் ஐந்துள்ளவனாய் - குடிக்கொரு புதல்வனாய் உள்ளவனைத் தாய் பிடிக்கத் தாதை அரிந்து சமைக்கும் கறியுணவு வேண்டும் எனக்கேட்டபோது சிறுத்தொண்டர் தம்

மனைவியான திருவெண்காட்டு நங்கையிடம் 'மற்றித் திறத்து மைந்தர் தமை நினைவு நிரம்ப நிதி கொடுத்தால் தருவார் உளரே' – ஆனால் நேர்நின்று தனயன் தன்னைத் தந்தை தாய் அரிவார் இல்லை. ஆகையால் இனித் தாழாமே எனையிங்குய்ய நீ பயந்தான் தன்னை அழைப்போம் யாம் — என்ற போது மறுப்பேதும் சொல்ல வில்லை அம்மாது.

என்று கணவர் கூறுதலும் அதனுக் கிசைந்து
எம்பிரான் தொண்டர்
இன்று தாழா தமுது செய்யப் பெற்றிங்
கவர்தம் மலர்ந்த முகம்
நன்று காண்ப தெனநயந்து நம்மைக்
காக்க வருமணியைச்
சென்று பள்ளியினிற் கொண்டு வாரும் –

என்றார் வாடாமலரனையார். இனிய மழலைக் கிண்கிணிக் கால் இரண்டும் மடியின் புடையில் இடுக்கிக், கனிவாய் மைந்தன் கையிரண்டும் கையால் பிடித்துக் கணவர் அக்குழந்தையின் தலையை அரியத் துணை செய்தார்.

உண்மைச் சேவகர் - எதைச் செய்தால் உடையாளின் முகம் மலரும் என்று கண்டு அதனைச் செய்வார்கள். அதை யொத்து நங்கையும் மகனின் மறைவிற்கு வருந்தாமல் 'கணவனார் அருமை உயிரை எனக்களித்தான் இவன்' என்று மகிழ்ந்து கூறித் துணைவனின் தொண்டிற்குத் துணை நின்றார்.

இப்படி எத்துணையோ கோணங்களில் நின்று ஒளி வீசும் மாதர் குலத்திற்கு என்ன கைம்மாறு செய்வது!

பெண்ணைச் சக்தியின் கூறாகவே வழிபடுதற்கு நமது சைவசமயம் உலகிற்கோர் எடுத்துக்காட்டு. அந்தச் சைவ சமய வளர்ச்சியில் பெண்களாகிய நாம் நம் பங்கைச் சரிவரப் பயன்படுத்தி – ஆவன செய்யவேண்டும்.

ஆகவே திலகவதிபோல உடன்பிறப்புக்காகவோ திருவெண்காட்டு நங்கைபோல் கணவனுக்காகவோ, மங்கையர்க்கரசிபோல் நாட்டுக்காகவோ – எப்படி வாழ்ந்தாலும் இசைபட வாழும் வாழ்வைப் பெண் தேடிக்கொள்ள வேண்டும்.

வருவிருந்து போற்றி - வருவாய் அறிந்து வகையொழிய வாழவேண்டும், மக்களை நன்னெறியில் ஒழுகச் செய்யத் தாய்

ஊன்றுகோல்போல் உதவவேண்டும். சான்றோனுக்கும் கடமையில் தாய்க்கும் பங்குண்டு.

தாயைப்போல் பிள்ளை என்பார்களே—தெய்வ பக்தியைப் பாலுடன் ஊட்டிப் பண்பெனும் தொட்டிலில் அவர்களை வளர்த்துவிட்டால் நாளை என்ற வேளை நன்மையுடையதாக ஒளிரும். நம் குழந்தைகளை நாம் கருத்துடன் இப்படி வளர்த்து விட்டால், அடுத்த தலைமுறை நிச்சயம் பக்தி நிறைந்த - பண்பு நிறைந்த, நன்றி — நிறைந்த சமுதாயமாக அமையும்.

நாமும் முன்னோடியாக இன்சொல்பேசல், பெரியோரைச் சார்ந்து ஒழுகல், இயன்றவரை உண்மை பேசுதல், ஒல்லும் வகையால் அறவினை செய்தல் இவைகளைக் கடைப்பிடித்துக் காட்டுவோம்.

அதற்காகத்தான் சான்றோர் வாழ்வை — செயலை நினைவூட்டிக்கொள்கிறோம். அடிக்கடி, ஒருவருக்கும் தீங்கு நினையாதே — செய்நன்றி குன்றாதே - ஏங்கி யிளையா திரு என்று எங்கள் ஆதீன குருமாமுதல்வர் கூறியதை என்னுள்ளம் இங்கே நினைக்கின்றது, அதனையே நம் வாழ்வின் தலையாய நோக்கமெனக் கொண்டு செயல் படுவோம்,

இவ்வரிய வாய்ப்பை என்னை நினைந்து கொடுத்த பெருந் தகையாளர்களை மீண்டும் வணங்கி — உங்களனைவருக்கும் என்சிரம் தாழ்ந்த வணக்கங்களைக் கூறி அமைகிறேன்.

வணக்கம்.

<u>திருமுறைப் பகுதி</u>

அடித்தது போதும் !

(நெல்லை. R. S. இராமலிங்கம்)

வடலூர் வள்ளல்—இராமலிங்க அடிகள் இறைவனை நோக்கி "அடித்தது போதும்! அணைத்திடல் வேண்டும்" என்று முறையிடுகின்றார். தாயிற் சிறந்த தயாவான தத்துவனும் இறைவன் தன்னிடம் அன்பு கொண்ட அடியவரை அடிப்பானா? அருட்பிரகாச வள்ளலாருக்கு அடிமேல் அடி வீழ்ந்ததா? அடிபடாமல் அடித்தது போதும் என்று அவர் சொல்லுவாரா? என்பது சிந்தனைக் குரியது.

தன் மனம்போல் திரியும் பிள்ளையைத் தந்தை யடித்தால் தாய் தடுப்பாள். தாய் அடித்தால் "பிள்ளையை ஏன் அடிக்கிறாய்?" என்று தந்தை தடுத்துக் கேட்பார். "தாயும் தந்தையுமாயிருக்கும் இறைவனே! என்னை அடிக்காமல் அணைத்திட வேண்டும்" என்று வள்ளலார் வேண்டுகிறார். இரக்கமே வடிவாய இராமலிங்க அடிகள் உடல் பொருள் ஆவி மூன்றையும் இறைவனிடமே ஒப்படைத்தவர். அவரது தளர்வுற்ற மேனியில் அடிமேல் அடிவிழுந்தால் அவர் என் செய்வார்? பாவம்! "அம்மையப்பா! இனி ஆற்றேன்; அடித்தது போதும்!" என்று அலறுகிறார்.

தடித்தவோர் மகனைத் தந்தையீண்டடித்தால்
தாயணைப்பள் தாயடித்தால்
பிடித்தொரு தந்தையணைப்பன் இங்குஎனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திருமேனி அம்பலத்தாடும் புனிதநீ
யாதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மையப்பா இனியாற்றேன்

"நின்பணி பிழைக்கிற் புளியம் வளாரால் மோதுவிப்பாய்" என்று நாவுக்கரசரும் பெருமான் முன்னிலையில் நின்று பேசுகிறார்! அவ்விதம் வள்ளலார் என்ன குற்றம் செய்தார்? அடிப்பதும் இறைவனுக்குரிய செயலா? ஆம். அடிக்கிறார் என்று மாணிக்கவாசகரும் அறிவிக்கிறார்!

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நான்என தெனுமாயக்
கடித்தவாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
அரும் பொருள் அடியேனை
அடிந்துஅடிந்து அக்காரமுன் தீற்றிய
அற்புதம் அறியேனே!

உலகம் ஒரு நாடக மேடை. மக்கள் எல்லோரும் அதில் நடிக்கும் பாத்திரங்கள். திருவாசகம் என்னும் தேனமுதம் தந்த மணிவாசகரும் தமக்குரிய பாகத்தை நடிக்கிறாராம்! உண்மையான அறநெறியிற் செல்லாது, நிலையிலாவாழ்வை

நம்பிப் பொய் பல பேசிப் பிதற்றித் திரிந்து, நான் நான் எனக் குளறி எனது என்னும் பற்றை விடாது அலேவது மக்கள் இயல்பாக இருக்கிறது. இந்நிலேயில் செல்லவிடாது தடுத்துத் தம்மை ஆட்கொண்டருளிய திறத்தை வியந்து பாடுங்கால் "அருமறை தேட நின்ற அரும்பொருள் அடியேனை அடித்து அடித்து அக்காரமுன் தீற்றிய அற்புதம் அறியேனே!" என்று அருளியுள்ளார். (அக்காரம்=சர்க்கரை)

ஆம். இறைவன் அடித்து அடித்து உயிர்களைப் பக்குவப் படுத்துகிருன். வினையாகிய தடியால்—துயரமாகிய கொம்பி ஞல் அடிக்கிருன். "இனித் தாங்க முடியாது என்று இறைவனை நோக்கிப் புலம்பும்போது வினையும் துயரமும் நம்மை விட்டு நீங்கும்படி செய்யும் பொறுப்பைச் சிவபெரு மான் ஏற்றுக் கொள்ளுகிருர்.

தன் பிள்ளையின் நோய் தீரும் பொருட்டுத் தாயானவள் கசப்பு மிக்க மருந்தைக் குழந்தைக்குக் கொடுக்கிருள். அறியாக் குழந்தை அழுகிறது. அதன் வாயில் இனிப்பான சர்க்கரையைத் தடவுகிருள். தன்னேயையும் மருந்தையும் மறந்து குழந்தை இன்பம் துய்க்கிறது. அதுபோல துயருற்று அழும் பக்தர்களுக்கு ஆண்டவனும் இனிப்புமிக்க வெல் லத்தைத்தருகிருனும். அதாவது அருளமுதம் வழங்குகின்ருன். எனவே தாங்கொணுத் துயரத்தை அனுபவித்தாலும் திருவரு ளால் எல்லையல்லாத இன்பத்தை அடையும் நிலே ஆன்மா விற்கு ஏற்படுகிறது. இவ்வித இன்ப நிலேயை அனுபவித்த மாணிககவாசகர் "அக்காரமுன் தீற்றிய அற்புதம் அறி யேனே!" என்று மெய்ம்மறந்து பாடுகிருர். அவன் திருவருட் செயல் அற்புதமிக்கது! கூறுெணுதது. ஆகையால், அற்புதம அறியேன் என்ருர்.

பள்ளியிற் பாடம் படிக்காத மாணவனை ஆசிரியர் அடிக் கிருர். அம்மாணவனிடம் வைத்த அன்பிஞல் ஆசிரியர் கண்டிப்பாக நடந்து கொள்ளுகிருர் என்பதை அச்செயல் விளககுகிறது. பெற்ற தாய் தந்தையர்கள் தம் பிள்ளை களுக்கு நோயோ கொப்புளமோ வந்தபோது அன்னியரைக் கொண்டு மருந்து கொடுத்தும அறுவை சிகிச்சை செய்தும் குணப்படுத்துகிருர்கள். அவ்விதம் செய்வது அவர்கள்பால் வைத்த அன்பே அன்றி, வன்முறையன்று என்பதை அறிவோம். இக்கருத்தைக் கச்சியப்பர் விளக்குகிருர்.

பெற்றிடுங் குரவ ராேனோர்
பிள்ளைகள் தம்பால் நோயொன்று
உற்றிடில் பிறரைக் கொண்டும்
உறுதுயர் செய்து தீர்ப்பர்
மற்றவர் தம்பால் அன்போ
வன்கணோ அதுபோல் நம்பால்
பற்றிய பவங்கள் தீர்ப்பான்
பரமனும் இவைகள் செய்தான்!

ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆளக்கூடிய வரம் பெற்ற சூரபதுமன் தேவர்களுக்கு அளவிறந்த துன்பங்களை விளைவித்தான். சுவர்க்கலோகத்தைத் தீயால் கொளுத்தினன். தேவேந்திரன் மகன் சயேந்திரனைச் சிறையில் அடைத்தான். துன்புற்ற தேவேந்திரன் சத்திய உலகுஞ் சென்று நான்முகனைக் கண்டு வணங்கி நின்று இன்னல் நீங்கும் வழியைச் சிந்திக்கும்போது நான்முகன் தேவேந்திரனை நோக்கி "நம் பாவங்கள் தீரப் பரமனும் இவைகள் செய்தான்" என்று கூறியதாகக் கச்சியப்பர் அமைத்துள்ள கவி சிந்தித்து உணரத்தக்க சிறப்பு வாய்ந்தது.

எனவே வாழ்விலே வறுமையாலும் நோயாலும் வினைப் பயனாலும் சில சமயம் தாங்கொணாத் துன்பத்தை யனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. மூன்றுவிதமான துன்பங்கள் மக்களை வாட்டுகின்றன என்பதை ஞானசம்பந்தர் விளக்குகிறார். அன்னியரால் காற்றால், மழையால் துன்பம் நேருவது ஒன்று. இது பிறர்தரவரும் இடையூறு அல்லது இடர் என்று சொல்லப்படும். இரண்டாவது இளமை மாறி முதுமை நேரும் போது தளர்வினால் நேரும் துன்பம். இந்நிலை எல்லோருக்கும் ஏற்படும். மூன்றாவதாக வினைப்பயனால் தொடர்ந்து வரும் நோய் வறுமை முதலியன. இம்மூன்று நிலையிலும் இறைவனை மறவாது திருவருளைத் தியானிக்க வேண்டும்; அவ்விதம் தியானித்தால் அளவிலா இன்பம் பெறலாம்.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே!

அய்யனே! சரணம்! என்றடைந்த அமரர்கள் உய்யும் பொருட்டு கடலில் எழுந்த நஞ்சை யுண்டு கண்டத்தில்

நிறுத்திக் கருணை செய்த பெருமானை இடரினும், தளரினும், நோய் தொடரினும் விடாது கைதொழுது வந்த தமது பண்பை அறிவிக்கும் ஞானசம்பந்தர் பாடலைப் பின்பற்றி எத்தகைய துன்பம் நேரினும் மனந்தளராது அவன் திருவடியை ஏத்திப் போற்றி வழிபட வேண்டும்,

எனவே வாழ்விலே வறுமையாலும் நோயாலும் துன்புற்று நலியும்போது *தீராநோய்தீர்க்கும்* பெருமானை—வினையை நீக்கும் விமலனை நினையாமல் துன்பக்கடலில் தவிக்கும் மக்களைப் பார்த்து மனமிரங்கி அவர்கள் நிலையைத் தம்மேல் வைத்து அருட்பிரகாசவள்ளலார் "எந்தாயும் எனக்கருள் தந்தையுமாயுள்ள நீ என்னை அடித்தது போதும்; அணைத்திடல் வேண்டும்" என்று பாடுவாராயினர். எனவே, தாய் முகம் நோக்கி அழுங் குழந்தை போல, அம்மையப்பன் திருவருளை நினைந்து அழுவோமானால் அவர் நம்மை அடிப்பதை நிறுத்தி ஆட்கொள்வார் என்பதில் ஐயமில்லை.

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்து ஊர்வது அஃதொப்பதில்"

என்னும் வள்ளுவர் வாய்மொழியை மனத்திற்கொண்டு, மலையே வந்து வீழினும் நிலையிற் கலங்காது நின்று 'வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச் சூழ்த்த மாமலர் தூவித்' துதித்து வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோமாக.

அண்ணல் ஆலவாய் நண்ணினுன்றனை
எண்ணியே தொழத் திண்ணம் இன்பமே.

மதிப்புரை

"செல்வத் திறவுகோல்" என்னும் நூல் ஒன்று (மூன்றாம் பதிப்பு) வரப்பெற்றோம். இதில் விநாயக கவசம் முதலிய பல பாராயணம் செய்யத் தக்க நூல்கள் உரையுடன் விளங்குகின்றன. விலை ரூ. 2-00. நூல் கிடைக்குமிடம்:—

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
1/140 பிராட்வே, சென்னை-1.

"குன்றக்குடி ஸ்ரீ சண்முகநாதப் பெருமான் பிரபந்தத் திரட்டு" என்னும் நூல் ஒன்று வரப் பெற்ருேம். இதில் மகான் வண்ணச் சரபம் அருள்திரு. தண்டபாணி சுவாமிகள் அவர்கள் அருளிய குன்றக்குடிக் கலம்பகம், கலவிமகிழ்தல் வண்ணம், திருப்புகழ்ப் பதிகங்கள், பிற பதிகங்கள், வகுப்புகள் போன்ற பாக்கள் 160க்குமேல் உள்ளன. பல்வேறு சந்தங்களில் சுவாமிகள் பாக்கள் பாடியருளிய திறம் படித்து மகிழ்தற்குரியது. குறிப்புரையும் அவ்வப்பக்கங்களினடியில் உள்ளது. டிம்மியளவில் 90 பக்கங்கள் கொண்ட இந்நூலின் விலை குறிக்கப்பெறவில்லை. கிடைக்குமிடம்:—

குன்றக்குடி திருவண்ணுமலை ஆதீனம்,
ஸ்ரீ ஐந்து கோயில் தேவாலய வெளியீடு,

குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டம், எனபதாகும். அஞ்சற் செலவனுப்பி நூலைப் பெற்று அன்பர்கள் படித்து மகிழ்வார்களாக. (அம்பை)

"குன்றக்குடி ஸ்ரீ சண்முகநாதன் தோத்திரத் திரட்டு" என்னும் நூல் ஒன்று வரப் பெற்ருேம். இதில் குன்றக்குடி முருகனைப் பற்றிய மிகச் சிறந்த பாக்கள் 15 திரட்டித் தொகுக்கப் பெற்றுள்ளன. இவைகளைப் பெருமான் முன் உருக்கத்துடன் பாடி வழிபடின் நலம் பயக்கும். விலை 15 காசுகள். கிடைக்குமிடம்:— குன்றக்குடி திருவண்ணுமலையாதீனம், குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டம். (அம்பை)

"திருமுறைப் பாடல்கள்" என்னும் தொகுப்பு நூல் ஒன்று வரப் பெற்ருேம். இதில் சிவபுராணம், பன்னிரு திருமுறைப் பாடல்கள் 28, பிற வழிபாட்டுப்பாடல்கள் 6 திரட்டி அச்சிடப் பட்டுள்ளன. இது பாராயணத்திற்கேற்றதொரு நூலாகும். விலை குறிக்கப்பெறவில்லை. நூல்கள் கிடைக்குமிடம்:— குன்றக்குடி திருவண்ணுமலை ஆதீனம், குன்றக்குடி, இராமநாதபுரம் மாவட்டம். (அம்பை)

பங்குனித்திங்கள் சிறப்பு நாள்கள்

5 (18-3-70) பூசம்—முனையடுவார் நாயனர் விழா
9 (22-3-70) பங்குனி உத்திரப் பெருவிழா
12 (25-3-70) சுவாதி—காரைக்காலம்மையார் விழா
21 (3-4-70) சதயம்—தண்டியடிகள் நாயனர் விழா
28 (10-4-70) உரோகணி—நேசநாயனர் விழா
30 (12-4-70) திருவாதிரை—கணநாத நாயனர் விழா

மதிப்புரை

"தில்லைத் திருவம்பலச் சருக்கம்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். கிடைக்குமிடம் அ. அ ராம. சுப்பய்யா செட்டியார், பெத்தாச்சி செட்டியார் தெரு, கோட்டையூர், இராமநாதபுரம் மாவட்டம். டபுள் கிரௌன் அளவில் 40 பக்கங்கள் கொண்டது. நல்ல அச்சு. விலை குறிக்கப்பெற வில்லை.

திருமந்திரத்துள் ஏரொளிச்சக்கரம், திருவம்பலச்சக்கரம் நவாக்கரிசக்கரம், புவனாபதிசக்கரம், வயிரவச்சக்கரம் ஆகிய பல சக்கரங்களின் பெயர்களையும், அவற்றுள் மந்திரங்களை அமைக்கும் முறையையும் ஆசிரியர் திருமூலர் மிகவும் குறிப்பாய் வெளியிட்டுள்ளார். குரு பரம்பரையின் வழிவந்த முனி புங்கவர்களுக்கு இச்சக்கரங்கள் அமைக்கும் முறை, வழி படும் முறை முதலியன தங்கள் குருவருளால் உணர்த்தப் பெற்றுவந்தன.

இடையறவு காரணமாகத் தற்காலத்து அச்சக்கரங்களை வைத்துப் பூசிப்பார் தொகை குறைந்து வருகின்றது. இருப்பினும் சிலர் அத்திபூத்தாற் போன்று இல்லாமலுமில்லை. அத்தகைய நிலையினருள் ஒருவரே உயர்திருவினர் அ. அ. ராம சுப்பய்யா செட்டியார் அவர்கள் ஆவார். அவர்கள் திருவம்பலச் சக்கரத்தைத் திருமந்திர நூலின் அடியொற்றி வரைந்து தக்கார் அருளும் பெற்று 1951 முதலே வழிபாடாற்றத் தொடங்கிப் பலனும் அனுபவித்துள்ளார்கள். தான் பெற்ற இன்பம் உலகம் துய்க்கக் கருதி இந்நூலை வெளியிட்டுளார்கள். இதில் நடராச வடிவம், திருவம்பலச் சக்கரம் முதலிய படங்களையும் அச்சக்கரத்தை வழிபட வேண்டிய முறையையும் விளக்கியிருப்பதோடு அவ்வழிபாட்டுக் குரிய திருமுறைப் பாடல்களையும் அச்சிட்டிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். திருமந்திரத்தில் திருவம்பலச் சக்கரம் என்னும் பகுதியில் 89 பாடல்கள் இருக்கின்றன. அவற்றுள் திருவம்பலச் சக்கரத்தைப் பற்றி விளக்கத்தக்க 17 பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இத்துறையில் வல்லவர்களுக்கு இந்நூல் ஒரு கருவூலமாகும். மேலும் தக்கார் பலர் இத்துறை பற்றி ஆராயவும் இந்நூல் ஒரு தூண்டுகோலாயமையும். ஆசிரியரின் இத் தொண்டு போற்றற்குரியது. ஆகவேயாவரும் வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டுகின்றோம்.

—அம்பை.

சமாஜத் தேர்வுகளின் பாடத்திட்டம்

இளஞ் சைவப் புலவர்

1. இலக்கணம்: நன்னூல் காண்டிகை (ஆறுமுக நாவலர்) (6–50) யாப்பருங்கலக்காரிகை (3–50 கழகம்) தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல் மட்டும 5–00)–கழகம்)

2. இலக்கியம்: திருமுருகாற்றுப்படை (0-75 நாவலர்) கந்தர் கலிவெண்பா (1-50-கழகம்) கந்தர் அனுபூதி (0–60-நாவலர்) திருக்குறள் அறத்துப்பால் (6-50-நாவலர்) பரிமேலழகர் உரையுடன், சுந்தரர் தேவாரம் முழுவதும் (1-30-நாவலர்)

3. சாத்திரம்: திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் (1-50-கழகம்) உண்மை விளக்கம் (2–75-கழகம்) திருவருட்பயன் (0–30-கழகம்) கொடிக்கவி, வினாவெண்பா (கழகம்)

4. உரைநடை: சைவத்தின் சமரசம் (திரு. வி. க.) வாகீசர் அல்லது மெய்யுணர்தல், (சிவக்கவிமணி 1-50கழகம்) தாயுமானவர் வரலாறும் ஆராய்ச்சியும் (கா. சு. பிள்ளை-2-50-கழகம்) பெரிய புராண வசனம் (ஆறுமுகநாவலர்-3–00) திருவிளையாடற் புராண வசனம் (ஆறுமுக நாவலர்–3-50)

சைவப் புலவர்

1. இலக்கணம்: தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்–நாவலர் 6–00) சொல்லதிகாரம் (சேனவரையம்–நாவலர் 3–50) பொருளதிகாரம் (இளம்பூரணம்-நாவலர் 9-50) தருக்க சங்கிரகம் (சிவஞான முனிவர்–நாவலர்-0-60)

2. இலக்கியம்: பெரிய புராணம் (திருநாவுக்கரசர் புராணம் முழுவதும்–3–50 காசிமடம் திருப்பனந்தாள்.) சம்பந்தர் தேவாரம் முழுவதும் (அம்பை நூலகம்) திருவாசகம் முழுவதும் (சமாசம் 1–00) ஒன்பதாம் திருமுறை முழுவதும் (சமாசம் 1–00)

3. சாத்திரம்: சிவஞானபோதச் சிற்றுரை (நாவலர் 2-75) சிவஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை-நாவலர்-6-00) சிவப்பிரகாசம் (நாவலர்-2-00) சங்கற்ப நிராகரணம் (கழகம்)

4. உரை நடை: சைவ சித்தாந்த ஞான போதம் (மறைமலையடிகள்—கழகம்-6—20) சிவஞான சித்தியார் ஆராய்ச்சி (சிவகுருநாத பிள்ளை—கழகம் 1-75) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க.வச்சிரவேல் முதலியார், 1—75 அம்பை நூலகம்) பெரிய புராண சூசனம் (நாவலர் 0—75)

சமஜத் தேர்வு எழுதுவோர் கவனிக்க

தேர்வு எழுத விரும்புவோர் பாடத்திட்டத்திற் குறித்துள்ள நூல்களை நன்கினிது படித்துப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். சைவப் புலவர் தேர்தலில் முதல் வகுப்பில் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் இளைஞர்க்கு அதற்கென அன்பரொருவர் வழங்கிய மூலப் பொருளினின்று வரும் வருவாயைக் கொண்டு பரிசு வழங்கப்பெறும். இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் மூன்றும் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் நான்கும் பதிவுக் கட்டணம் ஆகும். விண்ணப்பம் அனுப்பும் இறுதி நாள் 30—9—70. தேர்வு நவம்பர் மாதம் மூன்றும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும். விண்ணப்பத்தில் 1. பெயர், 2. வயது, 3 எழுத விரும்பும் தேர்வு, 4. தேர்வு எழுத விரும்பும் இடம், 5. படிப்பு முதலிய விவரங்கள் எல்லாம் எழுதப் பெற்றிருக்க வேண்டும். தேர்வுக்குரிய நூல்கள் அடைப்புக் குறியில் காணப்பெறும் இடங்களில் கிடைக்கும். அவைகளின் முகவரிகள் வருமாறு 1. ஆறுமுக நாவலர் அச்சியந்திரசாலை. 30 ', தங்கச்சாலைத் தெரு, சென்னை—1. 2. தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம், பிராட்வே, சென்னை-1. 3. அம்பை நூலகம், 7 A/1, கோவிந்தன் ரோடு, மேலைமாம்பலம், சென்னை-33. என்பதாகும்.

1969 நவம்பர் மாதத்தில் நிகழ்ந்த சமாஜத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் விவரம் :—

சைவப் புலவர் தேர்வு

எண்		பெயர்	வகுப்பு
1.	195	சின்னத்துரை வைத்திலிங்கம் கொழும்பு-12.	II
2.	197	திருமதி மாகதவல்லி சரவணமுத்து யாழ்ப்பாணம்	II
3.	196	திருமதி செல்வி சின்னத்துரை கண்மணி, நாவலட்பிட்டி, கொழும்பு.	III

இவ்வாண்டு சைவப்புலவர் தேர்வில் முதல் வகுப்பில் 60 குறியீடுகளுக்கு மேல் யாரும் பெருததால் அதற்கென்று பரிசுத் தொகையாக நம் சமாஜ அன்பர் ஒருவர் வைத்துள்ள மூலதனத்திலிருந்து வரும் வட்டித் தொகை ரூ. 50-00 (ஐம்பதும்) பரிசாக வழங்கப்பெற மாட்டாது. அடுத்த ஆண்டு முதல் வகுப்பில் வெற்றி பெற்ரோருக்கு இப்பரிசுத் தொகையையும் சேர்த்து வழங்கப் பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

இளஞ்சைவப் புலவர் தேர்வு

எண்		பெயர்	வகுப்பு
1.	640	திரு செல்வராசா விபுணசேகரம் இலங்கை	II
2.	637	திரு காத்தமுத்து சோமசுந்தரம் இலங்கை	III
3.	639	திரு தனபால ஷண்முகன் துரையப்பா யாழ்ப்பாணம்	III

நமது சமாஜப் பேரன்பரும் பூர்வாசிரமத்தில் சிவக்கவிமணி C. K. சுப்பிரமணியமுதலியார் என்ற பெயரில் விளக்கமாக அறியப்பட்டவர்களுமான தவத்திரு. சம்பந்த சரணுலயத் தம்பிரான் சுவாமிகளின் ஒன்பதாவது ஆண்டுக் குருபூசை விழா கோயம்புத்தூரை அடுத்த திருப்பேரூரில்

சுவாமிகளின் சமாதி மண்டபத்தில் 11—2—70-ம் தேதி புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலை 10-30 மணி அளவில் திருமுறைச் செல்வர் வித்துவான் S. அருணாசலம் பிள்ளை அவர்கள் குழுவினரின் தேவார இன்னிசையுடன் மகாபிஷேகம் தொடங்கப்பெற்றது. கோவை. கவியரசு வித்துவான் கு நடேச கவுண்டர் P. O. L. அவர்கள் விழா நிகழ்ச்சிகளுக்குத் தலைமைபூண்டு சுவாமிகள் பற்றிய இனிய நிகழ்ச்சிகளை நினைவூட்டிப்பேசினார்கள். நமது சமாஜப் பேரன்பர்கள் பலரும் பங்கு பெற்றுச் சிறப்பித்தனர். நண்பகல் மாகேசுர பூசையுடன் குருபூசை விழா இனிது நிறைவேறியது.

வாழ்க மணமக்கள்

நம் சமாஜப் பேரன்பர் திரு. சொ. நாராயணன் செட்டியார் அவர்கள் அருமைத் திருமகனார் நிறைநாட்செல்வர் சிங்காரவேலன் பி காம். அவர்களுக்கும், கீழச்சீவற்பட்டி பி. அழகாபுரி திரு. நா. வெ. வயி. வயிரவன் செட்டியார் அவர்கள் அருமைத் திருமகள் நிறைநாட்செல்வி சின்னக்கருப்பி பி. ஏ. அவர்களுக்கும் திருமணம் 9—2—70 அன்று பி அழகாபுரியில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. திருமண வாழ்த்துக் கூற வந்தவர்கள் யாவருக்கும் நம் சமாஜப் பதிப்பாகிய திருவாசகம் திருமண நினைவாகக் கொடுக்கப் பெற்றது மிகவும் பாராட்டுதற்குரியது.

புதுமணத்தம்பதிகளாகிய திரு. சிங்காரவேலனார் அவர்களும் திருமதி சின்னக்கருப்பி அம்மையார் அவர்களும் எல்லா நன்னலங்களும் எழிலுற வாய்க்கப்பெற்று இந்நிலத்து இன்புற்று வாழ திருச்செந்திலாதிபன் திருவருள் சுரக்குமாறு அவனடியிணைகளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

வாழ்க புது மணமக்கள், வளர்க அவர்கள் நல்வாழ்வு.

பிற செய்திகள்

விழுப்புரத்தில் 7-2-70 அன்று தென்னார்க்காடு மாவட்ட அருள்நெறி மன்ற மாநாடும் 8-2-70 அன்று திருப்புத்தூர்த் தமிழ்ச்சங்கப் பேரவைக் கூட்டமும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தன. பல பெருமக்கள் சமய ஆக்கம் பற்றி நிகழ்ந்த கவியரங்கு, சொற்பொழிவு, நாடகம், பட்டி மன்றங்களில் கலந்து சிறப்புறச் சொற்பணி யாற்றினர்.

திரிசிரபுரச் சைவசித்தாந்தசபையில் ஈரோடு திரு. அ. ஞானசம்பந்த முதலியார் அவர்களால் 11-1-70ல் ஐம்புலன வென்ருர், மனைவியை ஈந்தார் எனும் தலைப்புகளிலும் 1—2—70 ல் மனஞ்சுருங்காமாறனர் எனுந்தலைப்பிலும் சித்தாந்த தத்துவங்களை விளக்கி அரிய விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன. 11—1—70 அன்று பாவைப்போட்டியில் தேர்வுபெற்ற மாணவமாணவிகளுக்குப் பரிசுகளும் வழங்கப்பெற்றன.

காஞ்சிபுரம் காமாட்சியம்மையார் திருக்கோயிலில் நிகழ்ந்த மாசிப் பெருவிழாவில் மெய்கண்டார்கழகச் சார்பில் 16—2—70 முதல் 20—2—70 முடிய அறிஞர்பலர் சமய விரிவுரைகளாற்றினர். மேலும் 25—1—70, 1—1—70, 8—2—70, 15—2—70 ஆம் நாள்களில் முறையே இராச கோபுரக் கணபதி முருகர் கோயிலிலும், விகடச்சக்கர விநாயகர் கோயிலிலும் திருக்கச்சி மயானத்திலும், திருவேகம்பநாதர் திருக்கோயிலிலும் சிவத்தல வாரவழிபாடுகள் சிறப்புற நிகழ்ந்தன. அறிஞர் பலர் சமயவிரிவுரைகளு மாற்றிச் சிறப்பித்தனர்.

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலயசுவாமிகள் தமிழ்க் கல்லூரித் தொண்டர்குழுவின் 19-ஆம் ஆண்டுவிழா 18—2—70 புதனன்று புதுவையிலுள்ள சிவஞானபாலய ராதீனத் திருமடத்தில் நிகழ்ந்தது. உயர்திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ., தலைமையேற்ருர்கள். புதுவை மாநில ஆளுநர் மேதகு. B. D ஜட்டி விழாவைத் தொடக்கி வைத்தார்கள். புலவர் பெருமக்கள் பலர் பட்டிமண்டபத்தில் பங்கேற்றுச் சொற்பொழிவாற்றனர்.

காவேரிப்பாக்கத்தை அடுத்த இராமாபுரம் மாணிக்க வாசகர் மன்றத்தின் இரண்டாம் ஆண்டு விழா 21—2—70 சனிபன்று சிறப்புற நிகழ்ந்தது. திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை I. A. S. (ஓய்வு) தலைமையில் புலவர் பலர் சொற் பெருக்காற்றினர். நீத்தல் விண்ணப்பம் தெளிவுரை நூலும் வெளியிடப்பெற்றது.

21—2—70 அன்று பேரூரில் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் குருபூசை மிகச் சிறப்புற நிகழ்ந்தது. பிற்பகலில் மயிலம் தவத்திரு. சிவஞானபாலய சுவாமிகள், மேதகு. பி. டி. ஜட்டி (புதுவை மாநில ஆளுநர்) சிதம்பரம் தவத்திரு. சபாபதிச் சுவாமிகள் முதலிய சான்றோர்கள் பலர் சத்வித்யா சன்மார்க்க சங்க 54-ஆவது ஆண்டு விழாவில் கலந்து உரை யாற்றினர். 22—2—70 அன்று கல்லூரி விழாவும் 23—2—70 அன்று பள்ளிகள் விழாவும் நிகழ்ந்தன.

திருப்போரூர் ஸ்ரீ கந்தசாமி திருக்கோயிலில் 12-2-70 முதல் 23—2—70 முடிய சௌமிய ஆண்டுப் பெருவிழா மிகச் சிறப்புற நிகழ்ந்தது. தினந்தோறும் தமிழ் மறைப் பாராயணமும் சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன.

புரசைத் திருநெறிக் கழகத்தின் 108-வது திங்கள் வழிபாடு (9-வது ஆண்டு நிறைவு விழா) புரசை ஸ்ரீ வேம் படி விநாயகர் ஆலயத்தில் 15—2—70 மாலை சிறப்புற நிகழ்ந்தது. அவ்வமயம் தி. நா. செல்வராசன், M. A. அவர்கள் "திருமுறைப் பெருமை" என்ற பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள்.

திருவள்ளுவர் முத்தி பெற்ற நாளாகிய மாசி உத்திரத் தன்று (23—2—70) மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் தமிழச்சங்கத்தார் கோயிலில் உள்ள எழில்மிகு தோற்றமுடைய திருவள்ளுவர் திருவுருவத்திற்கு மாலையில் வழிபாடு ஆற்றப்பட்டது. பின் அங்குள்ள சைவ சித்தாந்த சபையில் மதுரை செய்தித்துறை அலுவலர் திரு. எ. வி. ஜெயசந்திரன் அவர்கள் தலைமை வகித்துத் திருக்குறள் மேன்மையைக் கூறினர். பின் புலவர் திரு. இறைக்குருவ னாரும் வித்துவான் தா. குருசாமியும் சொற்பொழிவாற்றி னர்.

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி முருகன் செந்தமிழ் சழக வார வழிபாட்டு 17–ஆம் ஆண்டு விழா 27—2—70 மாலையிலும் அக்கல்லூரி பழைய மாணவர் கழக 23 ஆம் ஆண்டுவிழா 1—3—70 காலையிலும் முருகன் செந்தமிழ்க் கழக 33 ஆம் ஆண்டு விழா 1—3—70 மாலையிலும் மிகச் சிறப்புற நிகழ்ந்தன. ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமுன்னர் புதுவை ஆளுநர் மேதகு. ஜட்டி முதலிய பெருமக்கள் பலர் பங்கு பெற்றுச் சிறப்பித் தனர்.

Statement about ownership and other particulars about newspaper (**SIDDHANTHAM** *to be published in the first issue* (MONTHLY) *every year after last day of February.*

Form IV
(See Rule 8)

1.	Place of publication	...	12, East Mada Street, Mylapore, Madras-4.
2.	Periodicity of its publication	...	Monthly
3.	Printers's Name	...	V. Sambandam
	Nationality	...	Indian
	Address	...	33, Armenian Street, Madras-1.
4.	Publisher's Name	...	S. Satchidanandam Pillai
	Nationality	...	Indian
	Address	...	175-A, Loyds Road, Madras-14.
5.	Editor's Name	...	V. Arunachalam Pillai
	Nationality	...	Indian
	Address	...	Gandhi Vidyalayam, Tiruchitrambalam. (via) Panthanallur, Tanjore Dt.
6.	Names and address of individuals who own the newspaper and Partners or shareholders holding more than one per cent of the total capital.		"Saiva Siddhantha Maha Samajam" (Registered) with no shareholders or partners but only members paying subscription. ["Siddhantham" is not a newspaper.]

I. S. SATCHIDHANANTHAM PILLAI, hereby declare that the Particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) *M. Narayanaswamy,*
for and on behalf of
S. Satchidanandam Pillai.

Date: 23—2—70

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.